# ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும், இருதொழிலுடைய கூடாரத்தொழிலாளிகள்

## தங்களைத் தாங்களே தாங்கிக்கொண்டு கிறிஸ்துவின் அங்கத்திற்கும் சேவை செய்யும் தன்னிச்சையான ஊழியர்கள்

சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் V3b என்ற பாடத்தை வாசிக்கவும்

## 1. புதிய ஊழியர்களை சேர்ப்பதற்காக உங்கள் இருதயத்தையும் மனதையும் ஜெபத்தாலும் வார்த்தையாலும் ஆயத்தம் செய்க.

ஜெபம்: "கர்த்தராகிய இயேசுவே, நாங்கள் உம்மை நேசிக்கிறோம். உமக்கு சேவை செய்ய விரும்புகிறோம். எங்கள் அன்றாடத் தேவைகளை சந்திக்கவும், உமது அங்கமாகிய சபைக்கு தொடர்ந்து சேவை செய்யவும், உமது இராஜ்யத்தை புறக்கணிக்கப்பட்ட இடங்களுக்கு விரிவு படுத்தவும், எங்கள் கையின் வேலைகளைச் செழிப்பாக்குவீராக."

ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாளையும் போல, பல இடங்களில் மேய்ப்பவர்களும் அப்போஸ்தலர்களும் கிறிஸ்துவின் அங்கமாகிய சபையை சேவித்துக் கொண்டே தங்களையும் தாங்கிக் கொள்ள வேண்டியது இருந்தது. இந்த இடங்களில் அடங்கியவை


a) விசுவாசிகள், அநேக சபைகளையும் குழுக்களையும் துவங்கும் இடங்களில்.

b) நீங்களும், நீங்கள் அனுப்பிய அப்போஸ்தலர்களும், வேலையைப் பொறுத்தவரையில், ஒரு சரியான மனநிலையை அடைய வேண்டிய இடங்களில். சோம்பேறித்தனமான தெசலோனிக்கியர் மத்தியில் பவுல் இதைச் செய்தார், 2 தெச. 3:6-13.

c) ஆட்சி அதிகாரிகள் இயேசுவின் சீஷர்களிடம் எதிர்ப்பு காட்டும் இடங்களில்.

d) விசுவாசிகள் தங்கள் மேய்ப்பர்களைத் தாங்கமுடியாத அளவிற்கு ஏழ்மையிலும், அதே சமயத்தில்

வேகமாக பல புதிய தலைவர்களை உருவாக்கும் நிலையிலும் உள்ள இடங்களில் உங்கள் மந்தை பெருகி புதிய குழுக்களையும் சபைகளையும் உண்டாக்கும் போது, நீங்கள் புதிய தலைவர்களை ஊழியத்தில் அமர்த்தி, ஸ்திரமாக சேவை செய்யும், என்ன செய்ய வேண்டுமென்று அறியவும் அவர்களுக்கு உதவ வேண்டும். நீங்கள் புதிய மந்தைகளை பிற பட்டிணங்களிலும், தூர இடங்களிலும் ஆரம்பிக்கும்போது நீங்களோ, அல்லது நீங்கள் அனுப்பும் அப்போஸ்தலர்களோ தங்களைத் தாங்கிக் கொள்ள சிறிய வியாபாரத்தை ஆரம்பிக்கலாம்.



**ஆக்கில்லாவுக்கும் பிரிஸ்கில்லாளுக்கும் ஒரு சிறு தொழில் இருந்தது. அவர்கள் அதில் பவுலுக்கு வேலை கொடுத்தனர்.**

அப். 18:1-3 ல் காண்க.

- ஆக்கில்லாவுக்கும் பிரிஸ்கில்லாளுக்கும் இருந்த சிறிய தொழில் என்ன (18:3).
- எந்தப் பட்டிணத்தை விட்டு தங்கள் தொழிலோடு அவர்கள் நீங்கினார்கள் (2).
- தொழில் தேவைப்பட்ட ஒரு சுவிசேஷகனுக்கு அவர்கள் வேலை கொடுத்தனர். அது யார்? (3).

அப். 18:24-26 ல் காண்க

- தங்கள் வீட்டில் யாருக்கு ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாவும் மேலும் பயிற்சி அளித்தனர்?
- அவர்கள் அப்பொல்லாவை எங்கு சந்தித்தனர்?

ரோமர் 16:3-5

- தன்னைத் தாங்கிய ஆக்கிலாவையும் பிரிஸ்கில்லாவையும் பற்றி அப்போஸ்தலர் பவுல் எவ்வாறு விவரித்தார் (3).
- அவர்களும் பவுலும் சேர்ந்து ஊழியம் செய்த இடம் பாதுகாப்பானதா, எதிர்ப்பு உடையதா (4).
- அவர்கள் சென்ற சபை எங்கு கூடியது (5).

## 2. வரும் வார நடடிக்கைகளையும் புதிய மந்தைகளை ஆரம்பிப்பதையும் குறித்து உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்

**மீள் பார்வை:** ஆக்கில்லா பிரிஸ்கில்லாளைப் பற்றி நீங்கள் படித்ததை உடன் ஊழியர்களுடன் மீள்பார்வை செய்க. உங்கள் உடன் ஊழியர்களிடம் அவர்களுக்கு இரண்டு வேலை உண்டு என்பதை விவரிக்கவும். ஒன்று தங்களைத் தாங்கிக் கொள்ள சம்பாதிக்கும் உலக வேலை. அடுத்தது, கர்த்தருக்காக செய்யும் மேய்ப்பர் தொழில். புதிய மந்தைகளை ஆரம்பிக்க உதவியாக மந்தையின் உறுப்பினர்கள் ஒரு சிறு தொழிலை ஆரம்பிப்பது பற்றி விவாதிக்கவும்.

அவர்கள் வளர்க்க வேண்டிய சிறு தொழில் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்பதை **விவரிக்கவும்.**

- அந்தத் தொழில் இன்னொரு பட்டிணத்துக்கு எடுத்து செல்லக் கூடியதாக இருக்க வேண்டும்.
- தங்களால் சமாளிக்கக் கூடிய அளவிற்கு அது சிறியதாக இருக்க வேண்டும்.
- புதிய மந்தைகளை உருவாக்கக் கூடிய உடன் ஊழியர்களையும் வேலைக்கு அமர்த்திக் கொள்ளும்படியாக இருக்க வேண்டும்.
- எளிய தொழில் நுட்பமும், மலிவான பொருட்களும் கொண்டு எளிதாக ஆரம்பிக்கக் கூடியதாக ருக்க வேண்டும்.
- இரு தொழிலுடையோர் தங்கள் நேரத்தை தாங்களே தெரிந்து கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும்.
- தங்கள் குடும்பத்தில் வைத்தே கர்த்தருக்கு சேவை செய்ய அவர்களுக்கு உதவுவதாக இருக்க வேண்டும்.
- தேவ சித்தத்தை அறிந்து தொழில் ஆரம்பிப்பதற்காக ஜெபிக்கவும்.

அவர்கள் எத்தகைய ஆயர் தொழில் செய்ய வேண்டும் என்பது பற்றி விவாதிக்கவும். ஏனெனில் அவர்களுக்கு அதிக வசதிகளோ, நேரமோ இருக்காது. அவர்கள் செய்ய வேண்டியவை:

- பிறர் தங்கள் இல்லங்களை திறக்கும் வரை அவர்கள் தங்கள் வீட்டடிலேயே ஒரு மந்தையை வழிநடத்த வேண்டும்.
- பொது இடங்களிலோ, ஆலயங்களிலோ அல்லாமல் சீஷர்களை சிறு மந்தைகளாக உருவாக்கவும்.
- புதிய தலைவர்களைத் தனியாகவோ அல்லது சிறு குழுக்களாகவோ உருவாக்கவும்.
- புதிய தலைவர்களை புதிய குழுக்களுக்கு உடனடியாக நியமிக்கவும்.
- நீங்கள் தற்போது படிப்பது போல பயிற்சி பாடங்களைப் பெற்றுக் கொள்ளவும். பாடங்கள் மலிவாகவும், விரைவில் நகலெடுக்கக் கூடியதாகவும், பட்டியல் அடங்கியதாகவும் இருக்க வேண்டும் (தெரிந்து எடுத்துக் கொள்ளும் வாய்ப்போடு).

## 3. வரும் ஆராதனை வேளைக்காக உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்

தற்போதைய தேவைக்கும், வட்டார பழக்க வழங்கங்களுக்கும் ஏற்றதை தேர்வு செய்க. பகுதி 1 ல் பட்டியல் இடப்பட்டுள்ள வேத பகுதிகளை வாசித்து, ஆக்கில்லா பிரிஸ்கில்லாவின் **கதையைக் கூறவும்.**

ஆக்கில்லா - பிரிஸ்கில்லா கதையின் பகுதிகளை **நடித்துக் காட்டுக.**

பகுதி 1 ல் படித்த வசனங்களில் நீங்கள் அறிந்து கொண்டதைப் பற்றி கேள்விகள் **கேட்கவும்.** இருபணி (bi-vocational) பற்றி பேச விசுவாசிகளை ஊக்குவிக்கவும்.

இருபணி செய்வோர், தேவன் தங்கள் வேலையை ஆசீர்வதித்தது பற்றி சாட்சியளிக்கலாம்.

தங்கள் வேலைக்கு சம்பாதித்துக் கொண்டே கிறிஸ்துவின் அங்கமாகிய சபைக்கு வேலை செய்வது பற்றி வழி வகைகளைக் காணுமாறு **விசுவாசிகளை ஊக்குவிக்கவும்.**

**சிறுவர்கள் தாங்கள் தயாரித்த நாடகம்**, கவிதை, கேள்விகளை வழங்கவும். கலியாண ஆடை அணியாமல் விருந்தில் கலந்து கொண்ட மனிதனின் கதையை **மத். 22:1-14** ல் இருந்து வாசித்து கர்த்தரின் பந்தியை அறிமுகப்படுத்தவும். ஆசாரியனாக சேவை செய்யும் போது ஆரோன் அணிய வேண்டிய ஆடையை ஒப்பிட்டு நோக்கலாம். கர்த்தரின் பந்திக்கு வரும் போது நாமும் கூட கிறிஸ்துவை அணிந்து கொள்ளுவதைப் பற்றி விவரிக்கவும்.

**மனன வசனம்** அப். 20:33-35.

ஒருவருக்கு ஒருவர் ஊக்கப்படுத்தவும், ஒன்றாகத் திட்டமிடவும், ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்கவும், புறக்கணிக்கப்பட்ட நகரங்களில் வாழும் மக்களுக்காக ஜெபிக்கவும் **சிறு குழுக்களாக** அமரவும்.

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net